22.01.2026

அ.வ.எண். 111/2018

பி.சா.1 – திரு. சதிஷ்பாபு, த/பெ.நடராஜன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.01.2026 is accordance with the provision of Act X of 3331

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் Diploma ECE படித்துள்ளேன். என் தகப்பனார் இறந்ததால் நான் வாரிசு அடிப்படையில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளேன். என் தகப்பனாருக்கும், 1ம் வாதிக்கும் எப்போது பாகசாசனம் ஏற்பட்டது என்றால் 1991 ம் ஆண்டு ஆகும். எனக்கு 40 வயதாகிறது. பாகசாசன ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி பாகசாசனம் என் தாத்தா, பெரியப்பா மற்றும் என் அப்பாவுக்கு இடையே ஏற்பட்டது. பாகசாசனத்தில் என்னுடைய தாத்தாவின் சொத்துக்கள் முழுவதுமாக பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். 59 சென்ட் நிலத்தை என் தாத்தா பாகமாக வைத்துகொண்டார். 59 சென்ட் நிலத்தை என் தாத்தா பாகமாக வைத்துகொண்டார் என பாகசாசன ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. என் தாத்தாவின் பெயர் ரங்கசாமி கவுண்டர். பாகசாசனத்தில் பொதுவானது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் 4ம் பக்கத்தில், பொது ஷரா என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது ஷரா என்பது பொதுவான வண்டித்தடம் மற்றும் மூன்று நபர்களுக்கும் பொதுவாக இருக்கும் சொத்து குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது, என் அப்பா, தாத்தா மற்றும் பெரியப்பாவுக்கு தான் தெரியும். பாகசாசன ஆவணத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்ற முழு விவரம் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் 6ம் பக்கத்தில், கடைசியில், "மேலும் A பாகஸ்தர் 1 இலக்கமிட்ட ரங்கசாமி கவுண்டர் பாகத்தில் க.ச.எண்.168/1G ல் கண்ட 250 சதுரடி இடத்தில் உள்ள அங்கன மாட்டு சாளையிடம் 1 இலக்கமிட்ட ரங்கசாமி கவுண்டர் காலமான பிறகு, மேற்படி இடம் சாளை முதலியன 2 இலக்கமிட்ட சுப்பையன் என்பவருக்கு, சேரத்தக்கதாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது" என்றால்

சரிதான்.

3. ரங்கசாமி கவுண்டரின் மொத்த சொத்துக்களில் 250 சதுரடி உள்ளிட்ட அனைத்து சொத்துக்களும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூன்று நபர்களுக்கு பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் வாதி, B பாகஸ்தராக கொடுக்கப்பட்டுள்ள சொத்தின் மொத்த மதிப்பு ரூ.14,590/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், B பாகஸ்தருக்கு கொடுக்கப்பட்டட தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் மொத்த கூட்டு தொகை ரூ. 14,490/- என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்ல வேண்டும். வழக்கின் ஆவணங்களை நான் சரிவர பார்க்காததாலும் வழக்கு விவரம் தெரியாததாலும், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. தாவா சொத்து எந்த காலை எண்ணில் உள்ளது என்றால் க.ச.எண்.148/2F ஆகும். அதன் கிழபுறம் ஏக்கர் 0.59 ½ சென்ட் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கின், வாதி , பிரதிவாதிகள் பெயர் எனக்கு தெரியாததால் என்னுடைய சாட்சியம் ஏற்றுகொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. க.ச.எண்.148/2F, ஏக்கர் 0.59 ½ சென்ட் மதிப்பு ரூ.100/- என வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதன் மேல்புறமாக உள்ள மறுபாதி சொத்து தான் தாவா சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது, 1ம் வாதிக்கு பாகசாசன ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றும், அது தட்டச்சு பிழை காரணமாக ஒரு பாகம் விடுபட்டுள்ளது என்றும், அது தான் 1ம் வாதியின் மொத்த பாக மதிப்பாக ரூ.14,590/- என வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தட்டச்சு பிழை எதுவும் இல்லை. என் அப்பாவுடன் பிறந்த இரண்டு தங்கைகள் மற்றும் என் அப்பா மற்றும் பெரியப்பாவை ஆளுக்கு சரிபாதியாக பிரித்து கொள்ளுமாறு என் தாத்தா சொன்னார். மேற்படி விவரத்தை எனது எதிர் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு, 2018 ம் ஆண்டு வா.சா.ஆ.3 விடுதலை பத்திரமானது, போலியாக எங்களுக்குள் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல. முறையாக ஏற்படுத்தப்பட்டது. மேற்படி சொத்தானது பொதுவாக குடும்பத்தாருக்குள் இருந்திருந்தால் வா.சா.ஆ.1 ஆவணத்தில், பொதுஷராவில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் பூர்வீக சொத்துக்களை வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ளார். தாவா சொத்தை என் தாத்தா தனியாக கிரயம் வாங்கியதால் ஆவணத்தில் வாசா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை. என் தாத்தா தனியாக கிரயம் வாங்கியது சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். சிட்டா தாக்கல் செய்துள்ளோம்.

6. தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் வாதி பெயரில் உள்ளது என்றால் பொதுவில் ரங்கசாமி கவுண்டரின் வாரிசுகள் பெயரில் உள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் வாதி பெயரில் மட்டும் உள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் மட்டுமே தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளனர் என்றால் சரியல்ல, பொதுவில் தான் உள்ளது. நாங்கள் இன்னும் பாகம் பிரித்துகொள்ளவில்லை. தற்போது தாவா சொத்தில் யார், யாருக்கு பங்கு உள்ளது என்றால் சுப்பையன், நடராஜன் ஆகியோருக்கு பங்கு உள்ளது. தாவா சொத்து சுப்பையனுக்கு பாகசாசனம் மூலம் வழங்கப்பட்டு, அதன் மதிப்பு வழஙகப்பட்டுள்ளது என்றும், நான் போலியான ஆவணங்கள் மூலமாக தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் போலி ஆவணம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்து பாகசாசனம் மூலமாகவே 1ம் வாதிக்கு வழங்கப்பட்டுவிட்டது என்றும், ஆகவே அதன் மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாமல் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur